பயன்படுத்தி சுருக்கமாக்குக. நேர்காணல் ஒலியிழையில் அல்லது கையடக்கக் கருவியில் பதிவுசெய்யலாம்). ஈர்க்கத்தக்க மாற்று: மாணவர்கள் தம்முடைய பண்பாட்டிலிருந்து புகழ்பெற்ற சமூக அரசியல் பெருமக்களுடன் ஒரு போலி நேர்காணலை நடத்தி ஆவணப்படுத்தல்.

## 5. விண்ணப்பங்கள், முறையீடுகள்

5 - 9 ஆந் தரம் | 45 மணித்துளிகள்

தாயகத்தில் அல்லது புகலிட நாட்டில் (வாழிட நாடு) நிலவும் உள நிறைவற்ற நிலைப்பாடுகள் அல்லது சூழ்நிலைகள் பற்றி கலந்துரையாடிய பின், சூழ்நிலையைச் சீர்ப்படுத்த மற்றும் யாருடைய பார்வைக்கு உருப்படியான பரிந்துரைகளை செலுத்தலாம், அல்லது ஊடகத்துக்கு அனுப்பப்படும் முறையீடு எப்படி அமையவேண்டும் என்பது பற்றி வழங்கக்கூடிய பரிந்துரைகள் பற்றிய கருத்துகளை மாணவர்கள் கருத்தாடல் செய்து ஊன்றியெண்ணுவர். அதன்பின் அவர்கள் கலந்துரையாடி பொருத்தமான எழுத்துருக்களை எழுதுவர். முறையீடு எதிர்நோக்கிய பொருத்தமான பெறுநருக்கு அனுப்புவதா அல்லது கற்பனை எழுத்துருவாகவே அது இருப்பதா என்பது பற்றி ஒவ்வொரு தனிப்பட்ட முயற்சியின்போதே முடிவுசெய்யப்படும். எடுத்துக்காட்டுகள்: தாயகப் பாராளுமன்றுக்கு அல்லது நாட்டுமுதல்வருக்கு தற்போதைய நெருக்கடி அல்லது சூழ்நிலை பற்றி ஒரு முறையீடு அல்லது கண்டனக் கடிதம்; மாணவர்களின் வதிவிட நாட்டில் பிறநாட்டவர்களுக்கு எதிரான கட்சி அல்லது நிறுவனத்துக்கு ஒரு மடல் அல்லது முறையீடு.

## 6. மடல்கள், மின்னஞ்சல்கள், குறுஞ்செய்தி, வகுப்புத்தொடர்பாடல், வலைப்பூக்கள், மின்னரட்டைகள்

2 - 9 ஆந் தரம்

ஒரே மொழி பேசும் மற்றவர்களுடன் உண்மையான எழுத்துத் தொடர்பாடல் நடத்தக்கூடிய பல கிளர்ச்சிமிக்க வாய்ப்புகள் பற்றி ஏற்கெனவே #12 இல் குறிப்பிடப்பட்டுள்ளன: "பெறுநருக்காக எழுதுதல்" என்பதில் குறிப்பிடப்பட்டது. வழக்கமான மடல் எழுதுதற்கப்பால், நவீன ஊடகம் எழுத்துத் தொடர்பாடல் நடத்தக்கூடிய மின்னஞ்சல், அல்லது குறுஞ்செய்தி போன்ற புதிய நடைமுறைக்கூறுகள் திறந்துவிடப்பட்டுள்ளன, இவை பள்ளித் தேவைகளுக்கும் நன்கு பொருத்தமானவை. இது எல்லா மொழிகளிலுமுள்ள வலைப்பூக்கள், மின்னரட்டைகள் ஆகியவற்றின் பயன்பாட்டுக்கும் பொருந்துவதாகும். எனினும், மாணவர்களின் தனிப்பட்ட தரவு கண்டிப்பாக மறைநிலையிலிருப்பதிலும், மாணவர்கள் கேள்விக்குரிய மன்றங்கள் பொருத்தமற்ற பொருள் ஆகியவற்றிலிருந்து விலகி நிற்றலிலும் விழிப்பாக இருப்பது மிக மிக இன்றியமையாததாகும்.
எழுத்தில் உண்மையான இலக்கு வாசிப்பாளரை நோக்கி என்பதற்கான ஈர்ப்புள்ள மாற்று என்பது மாணவர்கள் வரலாற்று ஆட்களுக்கு அல்லது நன்கறிந்த ஆளுமைகள் அல்லது அரசியல்வாதிகளுக்கு இயற்றுகின்ற (போலியான) மடல்கள், மின்னஞ்சல்கள் அல்லது குறுஞ்செய்திகள் என்பன பின்னர் வகுப்பில் படிக்கப்படும். உண்மையான எழுத்து ஒப்படைகள் கூட வாழ்த்து மடல்களில், எ.கா. அன்னையர் நாள் வாழ்த்துகள், கிறிஸ்மஸ், புத்தாண்டு அல்லது தேசிய விடுமுறைக் கொண்டாட்ட வாழ்த்து, மாணவர்களின் ஆக்கல், வடிவமைத்தல், எழுதுதல் என்பனவும் உள்ளடக்கும். செய்முறை எழுத்து ஒப்படைகளுக்கான பிற வாய்ப்புகள், மாணவர்கள், பெற்றோர் மாலைநிகழ்வு அல்லது பாரம்பரியமொழி வகுப்பு ஒழுங்கமைக்கும் பள்ளிப் பண்பாட்டுநிகழ்வு போன்ற அழைப்பிதழ்களை எழுதுதல் வடிவமைத்தல் ஆகியவற்றை உள்ளடக்கும்.

## 7. சிக்கல் சார்ந்த எழுத்துருக்கள்

5 - 9 ஆந் தரம் | 45 மணித்துளிகள்

இரண்டு பண்பாடுகளிலும் இடையேயும் வளர்தலில் உடன்பாட்டுப் பக்கங்கள் மட்டுமன்றி இடர்பாட்டுத் தன்மைகளும் உள. பாரம்பரியமொழி மாணவர்களுக்கு வளங்களை இரட்டிக்கும் நன்மையுண்டு, ஆனால் புகலிட நாட்டில் மட்டுமன்றி பிறந்த நாட்டிலும் கூட பக்கஞ்சார்தல் மற்றும் ஒதுக்கப்படல் ஆகியனவற்றை எதிர்நோக்கவேண்டி ஏற்படலாம். இச்சிக்கல்களைக் கையாளுவதுடன் மாணவர்களுக்கு அவர்கள் தங்கள் அடையாளத்துக்கான மற்றும் சார்புணர்வுக்கான தேடலில் துணைசெய்வது பாரம்பரியமொழிக் கற்கையின் இன்றியமையாத ஒரு பகுதியாகும். கலந்துரையாடல்களும் எழுத்து உருக்காட்டலும் இவ்விலக்குக்குப் பங்களிப்பன. இம்முயற்சியுடன் இணைந்ததான எழுத்து ஒப்படைகள் குறிப்பிட்ட வினாக்களைச் சுற்றி ஒரு கலந்துரையாடலைத் திட்டமிடலை உள்ளடக்கும், அவ்வினாக்களாவன, "இரண்டு மொழிகளுடனும் பண்பாடுகளுடனும் வளர்வதனால் ஏற்படக்கூடிய நன்மைகள், தீமைகள் பற்றிய என் எண்ணங்களும் உணர்வுகளும்", "ஓ, நான் ஓர் இருமொழியாளன்!", "என் தாயகத்தில் நான் எவ்வாறு என் வீட்டில் இருப்பதுபோல உணர்கிறேன்", முதலியன.

IV